# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் வணிக மாத இதழ்

Volume: 15 Issue : 05 AUGUST 2026 Tamil & English Monthly Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE










**SITCON 2026 Team members**
**Honored for their Services to make the event successful**

To

BOOK POST




**Sourashtra Chamber of Commerce**
**WON BVK AWARDS for Best Service to Entrepreneurs**



**Fine Printers**

Graphic | Print | Packaging



NK CTP
PREPRESS SOLUTIONS

WEDDING CARDS | BROUCHER | FLYERS | CALANDERS

PACKAGING BOX | LABELS



+91 93441 33320 +91 63834 33909
+91 82489 30871
finekumaran5@gmail.com
137/1 South Marret Street, (Manjanakkara St. Junction), Madurai - 625 001.



**JaiGenga Uniforms जेयगंगा यूनिफाम**

133-A, East Masi Street, 4 Feet Lane, Madurai - 625 001.
Email : jaigenga@gmail.com | Website : www.jaigenga.com
89035 34438, 887059 4105 ESTD : 1968

Mfrs. Hospital Dress Material & Uniform, School & College Lab Coats, Aprons Industrial Uniform, Hotel Industry Uniform, Pharmaceuticals Drugs Mfrs. Dress Wears




ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

*Ananda Nilayam*

**Mayflower**

*The Banquet Hall A/C*

Location - Google Map

| | | |
|---|---|---|
| Marriage Function | Betrothal | Naming Ceremony |
| Birthday Party | Puberty | Get-to-gether |

*Hall available for all type of functions*

Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001

**For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583**

# தலைவர் அறிக்கை

**அஸ்கிதெ ஙேகோ மொன்னு பொறெ**

**நமஸ்கார்...**

K.K. தினேஷ், தலைவர்

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், 8வது முறையாக மிகச்சிறப்பான முறையில், சிட்கான் 2026 தொழில் வர்த்தக மாநாடு மற்றும் கண்காட்சியை நடத்தி முடித்துள்ளது.

துணைத் தலைவர் திரு. K.K. குபேந்திரன் அவர்களின் தலைமையில் இந்த மாநாடு வெகு சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டிற்காக உருவாக்கப்பட்ட குழு ஒருங்கிணைப்பாளர்கள் தங்கள் குழுவினருடன் சிறப்பாக செயல்பட்டதை அங்கீகரிக்கிறேன். குறிப்பாக ஸ்டால் குழுவினர், மலர் குழுவினர் மற்றும் உணவு ஏற்பாட்டுக் குழுவினர்.

முன்னாள் தலைவர்களின் வழிகாட்டுதலில் இந்த மாநாடு வெகு விமரிசையாக நடைபெற்றுள்ளது. முக்கியமாக, நன்கொடையாளர்கள் இந்த மாநாட்டிற்காக ஈடுபாட்டுடன் தங்களை இணைத்துக் கொண்டது சேம்பர் மீது இருக்கும் மிகப்பெரிய நன்மதிப்பே எனலாம்.

சரியான திட்டமிடல், நிதி ஆளுமை போன்றவற்றில் சிறப்பாக கவனம் செலுத்தி மாநாட்டிற்கு பெரிதும் உறுதுணையாக இருந்த இணைச் செயலாளர் திரு. K.K. தினகரன் அவர்களின் பங்கு அளப்பரியது.

இந்த மாநாட்டுடன் இணைந்து நடத்தப்பட்ட நெக்ஸ்ட்ஜென் அமைப்பினரின் மதுரை ரன் என்ற தலைப்பிலான மினி மாரத்தான் போட்டி மிகப்பெரிய கவனத்தை பொதுமக்களிடத்தில் ஏற்படுத்தியுள்ளது. இதற்காக உழைத்த அவ்வமைப்பின் தலைவர் திரு. S.S. பிரேம் குமார் அவர்களுக்கும், அவர்தம் குழுவினருக்கும் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

மாநாடு தொய்வில்லாமல் நடைபெற, மகளிரின் ஈடுபாடு மெச்சத்தக்கது. அவர்கள் ஒரு குழுவாக இணைந்து, நடனம், தசாவதார நிகழ்ச்சிகள் என கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்தி, பார்வையாளர்களை சோர்வடையச் செய்யாமல் தக்க வைத்தது சிறப்பு.

மாநாட்டின் முன்னும் பின்னும் இரண்டு தூண்களாக அமைந்தது சௌபாக்யாஸ்-ன் வைர விழிப்புணர்வு நிகழ்ச்சியும், பிவிகே குழுமத்தின் ஸௌராஷ்ட்ர சாதனையாளர்கள் விருது வழங்கும் நிகழ்ச்சியும்.

கண்காட்சியிலும், வர்த்தக கருத்தரங்கிலும் குலுக்கல் பரிசுகளை ஆவலுடன் வழங்க நம் சேம்பர் உறுப்பினர்கள் பலர் ஆர்வம் காட்டியது அருமை.

நிறைவாக, மாநாட்டின் வெற்றி, நம் சமூக மக்களின் ஒத்துழைப்பில் மட்டுமே என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி.

## SOURASHTRA CHAMBER OF COMMERCE
## BOARD OF MEMBERS
## YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

**Patron Members**

| | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. **குமரேஷ்** பாபு

**04.08.2026** – சிட்கான் 2026 வர்த்தக கண்காட்சி ஸ்டால் அமைப்பாளர்களுக்காக பிரத்தேயக வழிகாட்டு கூட்டம் சேம்பர் அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டது.

**06.08.2026** – அருணாச்சலம் கமலாம்பாள் அரங்கில் சிட்கான் 2026 வர்த்தக கண்காட்சி சிறப்பாக நடைபெற கணபதி பூஜை செய்யப்பட்டது.

**07.08.2026** – சிட்கான் 2026 வர்த்தக கண்காட்சியை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. சரவணன், வி தி லீடர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. A.R. மஹாலட்சுமி இணைந்து துவக்கி வைத்தனர். திரு. R.K. பாபுலால், திரு. P.R. குபேந்திரன், திரு. T.K. விஜய் பாபு மற்றும் சேம்பர் நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

**09.08.2026** – காலை 6 மணிக் மதுரை ரன் மினி மாரத்தான் போட்டி நெக்ஸ்ட்ஜென் அமைப்பினரால் காந்தி மியூசியத்தில் நடத்தப்பட்டது. நமது சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தமிழக மின்சாரத்துறை அமைச்சர் திரு. C.T.R. நிர்மல் குமார் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அன்றைய தினம் சிட்கான் 2026 வர்த்தக கண்காட்சியின் நிறைவு விழாவில், மதுரை தெற்கு சட்ட மன்ற உறுப்பினர் திரு. M.M. கோபிசன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

**15.08.2026** – நாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நமது சேம்பர் வளாகத்தில் சரியாக காலை 8.30 மணிக்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் கரங்களால் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. பின்னர், சுதந்திர தின நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக திரு. L.G. மகேந்திர முரளி Former Group Director, Vikram Sarabhai Space Centre, Trivandrum அவர்கள் கலந்து கொண்டு பேசினார்.

**15.08.2026** – மாலை 4 மணிக்கு தமிழ்நாடு தொழில் வர்த்தக அரங்கில், சிட்கான் 2026 தொழில் வர்த்தக மாநாடு துவங்கியது. விழாவில், டாட்காம் இன்ஃபோ நிறுவனத் தலைவர் திரு. வெங்கடேஷ் ராஜேந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், K.L.N. பொறியியற் கல்லூரி கௌன்சிலின் தலைவர் திரு. K.N.K. கணேஷ் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவில், சிட்கான் 2026 மலர் வெளியீடு செய்யப்பட்டது. சிறந்த தொழில் முனைவோருக்கான ஸ்டார் விருது திரு. T.T. சேதுராம் அவர்களுக்கும், சிறந்த தொழில் சேவைக்கான உத்யோக் சேவா ரத்னா விருது முன்னாள் தலைவர் திரு. M.K. கலாதர் பாபு அவர்களுக்கும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

**16.08.2026** – சிட்கான் 2026 மாநாட்டின் இரண்டாம் நிகழ்ச்சியில், தொழிலதிபர்கள் திரு. ஜீவன் ரமேஷ், திரு. N.T. ஸ்ரீநிவாசன், திரு. P.R. குபேந்திரன், பேரா. கே.என். கணேஷ் ஆகியோரும், சிறப்புப் பேச்சாளராக பிரபல எழுத்தாளரும், வழக்கறிஞருமான திருமதி. சுமதி அவர்களும் கலந்து கொண்டு பேசினார்கள். விழாவில், பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளும், மாணவ மாணவியரின் திறன் வெளிப்பாடு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது. நன்கொடையாளர்களுக்கு விழா மேடையில் அங்கீகாரம் செய்யப்பட்டது. இந்த சிட்கான் 2026 வர்த்தக மாநாடு, துணைத் துலைவர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் தலைமையில் சிறப்பு நடந்தேறியது.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. **விக்னேஷ்** பாபு

நமது லாப் ஸமாச்சார் குழுவினரின் பொறுப்பில் சிட்கான் 2026 மாநாட்டு மலர் பணி மேற்கொண்டது. எடுத்துக்கொண்ட பணியை மிகச்சிறப்பாக குறித்த நேரத்தில் விழா மேடையில் முழுமையான வடிவில் வெளியானது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த முயற்சிகள் அனைத்திற்கு எனது குழுவினர் திரு. K.K. சங்கர், திரு. K.S. சிவக்குமார், திரு. T.K. யாகேஸ்வரன், திரு. K.K. ராம்குமார் ஆகியோரின் சிறப்பான களப்பணியும், முன்னாள் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளின் வழிகாட்டுதல்களே ஆகும்.

இந்த மாநாட்டு மலர், 15.08.2026 அன்று மாலை நடைபெற்ற சிட்கான் 2026 மாநாட்டின் துவக்க விழாவில் கலந்து கொண்ட மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. M.M. கோபிசன் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. முதல் பிரதியை இட்கான் முன்னாள் இயக்குநர் திரு. S.R. நாகேஸ்வரன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

மலர் வெகு சிறப்பாக வெளிக்கொண்டு வர உதவிய, விளம்பர தாரர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாகுக. அதே போல, கட்டுரைகளைத் தந்து மலரை மேலும் மெருகேற்றிய எழுத்தாளர்களுக்கும் எமது குழுவின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மகத்தான பணியை ஆற்ற, நிர்வாகத்தால் எனக்களித்து பணியை சிறப்பாக செய்து முடித்துள்ளேன் என்பதில் பெருமை கொள்கிறேன். நன்றி.

### திருக்குறள்

**உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்**
**பாத்தியுள் நீர்சொரிந் தற்று.**

**பொருள்:** உணர்ந்து அனுபவிக்கும் தன்மை உள்ளவர்களுக்கு முன்னால் பேசிப் பழகுவது. வளரும் பயிருள்ள பாத்திக்குள் நீர் பாய்ச்சுவதைப் போன்றது.

அவை அறிதல்
அதிகாரம் 72 (சபையை அறிந்து பேசுவது) அங்கவியல்


**ஆண்டு சந்தா உறுப்பினர்கள் 2026-27ம் ஆண்டிற்கான சந்தா தொகையை விரைவில் செலுத்தக் கேட்டுக்கொள்கிறோம்**

Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account

Name
**Sourashtra Chamber of Commerce**
Bank
**State Bank of India**
Acct. No.
**30134805614**
Branch
**Madurai City**
IFSC
**SBIN0011544**

# GUEST HOUSE
AVAILABLE ON RENT


@ COURTALLAM

## BeKae Props. P Ltd

No.162, Courtallanather Main Road, Courtallam.
(Opp to Sri Parasakathi College for Women)

DAILY & WEEKLY BASIS | SINGLE / DOUBLE Rooms with Hall

Contact: S.Kumar 98849 19918






BEKAE



அவோ! மிளோ!! ஹொடோ!!!

SITCON

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

August 7, 8, 9 & 15, 16, 2026

# சிட்கான் 2026
## தொழில் வர்த்தக கண்காட்சி



சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் சிட்கான் 2026 தொழில் வர்த்தக மாநாட்டின் ஒரு பிரிவாக நடத்தப்படும் தொழில் வர்த்தக கண்காட்சி கடந்த 07.08.2026 அன்று மதுரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள அருணாச்சலம் கமலாம்பாள் அரங்கில் துவங்கியது.

வர்த்தக கண்காட்சியை, தமிழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. சரவணன் அவர்கள், வி தி லீடர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. A.R. மஹாலட்சுமி இணைந்து வர்த்தக கண்காட்சியை துவக்கி வைத்தனர்.

கம்பெனி செக்ரேட்ரி திரு. R.K. பாபுலால், சத்யபாமா கேட்டரிங் திரு. P.R. குபேந்திரன், முகந்தா எண்டர்பிரைசஸ் திரு. T.K. விஜய்பாபு ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த துவக்க விழாவில், மாநாட்டின் சேர்மன் திரு. K.K. குபேந்திரன், தலைவர் திரு. K.K. தினேஷ், முன்னாள் தலைவர்கள் திரு. C.K. சேகர், திரு. E.R.K. குமரேசன், திரு. S.K.R. ரமேஷ், திரு.குமரன் B.ஜகுவா, திரு. M.K. கலாதர்பாபு, உடனடி முன்னாள் தலைவர் திரு. T.R. மோகன்ராம், திரு. V.G. ராம்தாஸ், ஸ்டால் ஒருங்கிணைப்பாளர்கள் திரு. M.M. தனசேகரன், திரு. S.S. ராம்சுந்தர் மற்றும் உறுப்பினர்கள் திரு. K.K. சங்கர், திரு. S.M. கார்த்தி குமரன், திரு. S.R. சுந்தர்நாத் ஆகியோர் உடன் இருந்தனர்.

07.08.2026 - வெள்ளிக்கிழமை துவங்கி, 09.08.2026 ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாட்களுக்கு சிட்கான் 2026 தொழில் வர்த்தக கண்காட்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியில். 77 ஸ்டால்கள் இடம்பெற்றன. தவிர, 24 சிறிய ஸ்டால்கள் இடம்பெற்றன.

கண்காட்சிக்கு, சேம்பர் உறுப்பினர்கள், சமூக முக்கியஸ்தர்கள், பொது மக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் என 5000க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்,

குறிப்பாக, சௌராஷ்ட்ர மத்ய சபை உறுப்பினர்கள், சேலம், ராசிபுரம், திண்டுக்கல் சபை நிர்வாகஸ்தர்கள், ஸ்ரீநிவாச பெருமாள் கோவில் நிர்வாகஸ்தர்கள் வருகை தந்து கண்காட்சியை பார்வையிட்டனர்.

மேலும், தொழிலதிபர் திருமதி. பூர்ணிமா வெங்கடேஷ், மதுரை மாவட்ட தொழில் மைய இணை இயக்குனர் திரு. கணேசன், மதுரை மண்டல பத்திரிக்கை அமைப்பின் தலைவர் திரு. எஸ். கதிரவன், தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் மகளிர் பிரிவின் தலைவர் திருமதி. ராஜ்குமாரி ஜீவகன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிட்டனர்.

கண்காட்சியில், கே.எல்.என். பொறியியற் கல்லூரியின் சார்பாக ஸ்டால் அமைக்கப்பட்டிருந்தன. அதில். மாணவர்களின் தனித்திறனை வெளிப்படுத்தும் விதமாக, அவர்களின் முயற்சியில் உருவாக்கப்பட்ட படைப்புகளை காட்சிப்படுத்தியிருந்தார்கள். கல்வி நோக்கத்திற்காக கண்காட்சியில் பங்கேற்றவர்களுக்கு இது அறிவியல் விருந்தாக அமைந்தது.

இந்த மூன்று நாட்களிலும், காலை 10 மணி துவங்கி, இரவு 8 மணி வரை ஒவ்வொரு மணி நேரத்திற்கு ஒரு முறை குலுக்கல் பரிசுகள் வழங்கப்பட்டன. தவிர, பம்பர் குலுக்கல் பரிசுகளும் வழங்கப்பட்டன. பரிசுப்பொருட்கள் தந்து உதவிய கணவான்களுக்கு சௌராஷ்ட்ர சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது. திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் இந்த குலுக்கல் பரிசை பொறுப்பேற்று நடத்தினார். திரு. S.S. பிரேம் குமார் அவர்கள் பெரும் உதவியாக இருந்து செயல்பட்டார்.



முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் மற்றும் வி தி லீடர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஏ.ஆர். மஹாலட்சுமி அவர்கள் வர்த்தக கண்காட்சி ஸ்டால்களை பார்வையிடும் காட்சி. உடன் சேம்பர் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்.










அவோ ! மிளோ !! ஹொடோ !!!

SITCON

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

August 7, 8, 9 & 15, 16, 2026

SOURASHTRA CHAMBER OF COMMERCE

MADURAI





































சிட்கான் மாநாட்டின் வர்த்தக கண்காட்சி நிறைவு நாள் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக, மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் **திரு. M.M. கோபிசன்** அவர்கள் கலந்து கொண்டார். வர்த்தக கண்காட்சி ஸ்டால்களைப் பார்வையிட்டுப் பேசினார். இந்த நிகழ்வில், ஜெயஸ்ரீ ஸ்பன்பாண்ட் திரு. T.T. சேதுராம், வாருணி கெமிக்கல்ஸ் திரு. K.S. தேவானந்த், சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ், சிட்கான் 2026 வர்த்தக மாநாட்டின் சேர்மன் திரு. K.K. குபேந்திரன், பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு, முன்னாள் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

















ஸௌராஷ்ட்ர நெக்ஸ்ட்ஜென் அமைப்பின் சார்பாக நடத்தப்படும் மதுரை ரன் மாரத்தான் போட்டியை தமிழக மின்சாரம் மற்றும் சட்டத்துறையின் மாண்புமிகு அமைச்சர் **சி.டி.ஆர். நிர்மல் குமார்** அவர்கள் துவக்கி வைக்கிறார்.

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நடத்தும் சிட்கான் 2026 மாநாட்டு நிகழ்ச்சிகளுடன், ஸௌராஷ்ட்ர நெக்ஸ்டஜென் அமைப்பு இணைந்து மதுரை ரன் மாரத்தான் ஓட்டப் போட்டியை 09.08.2026 அன்று காலை காந்தி மியூசியத்தில் நடத்தியது. மதுரை மாநகரை தூய்மையான நகராக மாற்றுவதற்கும்,(க்ளீன் மதுரை), போதை விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த மாரத்தான் போட்டி நடைபெற்றது.

இந்த மாபெரும் நிகழ்வை தமிழக அரசின், மின்சார மற்றும் சட்டத்துறையின் மாண்புமிகு அமைச்சர் திரு. C.T.R. நிர்மல் குமார் அவர்கள் கலந்து கொண்டு கொடியசைத்து துவக்கி வைத்தார். மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. M.M. கோபிசன், சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கருப்பையா, கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கார்த்திகேயன் ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்த நிகழ்வில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், பொது மக்கள் என 1850க்கும் மேற்பட்டோர் போட்டியில் பங்கேற்றனர். அவர்கள், போதையில்லா சமூகம் உருவாக உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கலந்துகொண்ட அனைவருக்கும் சான்றிதழும், நினைவுப் பரிசும் அளிக்கப்பட்டன.

ஸௌராஷ்ட்ர நெக்ஸ்ட்ஜென் அமைப்பின் தலைவர் திரு. S.S. பிரேம் குமார், செயலாளர் திரு. அம்ருதேஷ் K. ஜகுவா, பொருளாளர் திரு. S.S. அஜீத் ஆகியோரும், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் தலைவர் திரு. K.K. தினேஷ், சிட்கான் சேர்மன் திரு. K.K. குபேந்தரன், பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு, பொருளாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜீ மற்றும் உறுப்பினர்கள் பலர் உடன் இருந்தனர்.

















# பாரத தேசத்தின் 80வது சுதந்திர தின விழா கொண்டாட்டம்




நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வளாகத்தில், பாரத தேசத்தின் 80வது சுதந்திர தின விழா கடந்த 15.08.2026 அன்று கொண்டாடப்பட்டது. சரியாக காலை 8.30 மணிக்கு தேசியக் கொடியை சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் ஏற்றினார்.

நாட்டுப்பண் பாடப்பட்டபின், விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, சுதந்திர தின சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக, திரு. L.G. மகேந்திர முரளி. Former Group Director, Vikram Sarabai Space Centre, Trivandrum அவர்கள் கலந்து கொண்டு பேசினார். அவர் தனது உரையில், நாட்டிற்கு தமது அற்பணிப்புப் பணிகள் பற்றி விவரித்தார். நம் சமூக இளைஞர் நாட்டின் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். சேம்பர் நிர்வாகிகள் மற்றும் அங்கத்தினர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். சேம்பர் பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி தெரிவித்தார்.




## தொழில் நிறுவனங்களின் அபராதம் தொடர்பான பிரச்சனைகளுக்கு சுமூகத் தீர்வு காண விஸ்வாஸ் 2026 ஐ இபிஎஃப்ஓ அறிமுகம் செய்துள்ளது.

ஊழியர் வருங்கால வைப்புநிதி, பல்வகை அம்சங்கள் சட்டம் 1952, பிரிவு 14பி, சமூகப் பாதுகாப்பு சட்டத்தொகுப்பு 2020 பிரிவு 128 ஆகியவற்றின் கீழ், அபராதம் தொடர்பான பிரச்சனைகளுக்கு சுமூக தீர்வு காண மத்திய தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள ஊழியர் வருங்கால வைப்பு நதி அமைப்பு விஸ்வாஸ் 2026 என்ற முன் முயற்சியை தொடங்கியுள்ளது.

தாமாக முன்வந்து இணக்கம் தெரிவித்தல், வழக்குகளைக் குறைத்தல், ஊழியர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில், அபராதங்கள் தொடர்பான நீண்ட காலம் நிலுவையில் உள்ள பிரச்சனைகளுக்கு விரைந்து தீர்வு காண விஸ்வாஸ் 2026 அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் வெளிப்படையான, முழுவதும் டிஜிட்டல் முறையிலான, காலவரம்புக்கு உட்பட்ட நடைமுறையின் மூலம் தகுதியான வழக்குகளுக்குத் தீர்வு காணும் வாய்ப்பை வேலைவழங்குவோருக்கு அளிக்கிறது.

நீதித்துறையின் மூன் வழக்காக உள்ள அபராதம் செலுத்த உத்தரவிடக் கூடிய வழக்குகள்;

பிடித்தத்திற்கான சான்றிதழ் வழக்குகள் உட்பட நிலுவையில் உள்ள பிடித்தம் அல்லது பகுதி அளவு பிடித்தம் செய்த இறுதி அபராத உத்தரவு சார்ந்த வழக்குகள்;

அபராதம் தொடர்பாக இறுதி உத்தரவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு இன்னமும் தீர்வு காணப்படாத வழக்குகள்;

அபராதத்திற்கு இன்னமும் நோட்டீஸ் அனுப்பப்படாத வழக்குகள் என 4 வகையிலான வழக்குகளை உள்ளடக்கியதாக இந்தத் திட்டம் இருக்கும்.

டிஜிட்டல் கையொப்ப சான்றிதழ் அல்லது இ-கையொப்பத்தைப் பயன்படுத்தி இபிஎஃப்ஓ வேலை வழங்குவோர் போர்ட்டல் மூலம் விஸ்வாஸ் 2026-ன் கீழ் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இந்தத் திட்டத்தை சுமூகமாக அமலாக்குவதற்கு விரிவான நடைமுறை வழிகாட்டுதல்களை அனைத்து மண்டலங்கள், பிராந்தியங்கள், மாவட்ட அலுவலகங்களுக்கு இபிஎஃப்ஓ அனுப்பியுள்ளது. - PIB News (17.07.2026)




சிட்கான் 2026 தொழில் வர்த்தக மாநாட்டின் துவக்க விழாவில், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் வரவேற்புரையாற்றிகிறார்கள். மாநாட்டின் சேர்மன் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் மாநாடு பற்றி பேசுகிறார். மேடையில், இணைச் செயலாளர் திரு. K.K. தினகரன், பொருளாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜீ, சிறப்பு விருந்தினர்கள் திரு. வெங்கடேஷ் ராஜேந்திரன், திரு. K.N.K. கணேஷ், உடனடி முன்னாள் தலைவர் திரு. T.R. மோகன்ராம், பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு மற்றும் இணைச் செயலாளர் திரு. T.N. சூரியபிரகாஷ்.

சிட்கான் 2026 மாநாட்டின் துவக்க விழா 15.08.2026 அன்று மாலை 4 மணிக்கு மதுரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு தொழில் வர்த்தக அரங்கத்தில் நடைபெற்றது.

மாநாடு துவக்கத்தில், கணபதி ஹோமம், யஜுர் வேத பாராயணத்துடன் துவங்கியது. வேத ஆசிரியர் K.R. ராமாச்சாரி அவர்களின் மாணவர்களால் நடத்தப்பட்டது. இஷா கோவிந்த் அவர்களின் பரத நாட்டிய நிகழ்ச்சி அரங்கேறியது.

தொடர்ந்து, மாநாட்டு நிகழ்ச்சிகள் துவங்கின. முதலில், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். மாநாட்டின் சேர்மன் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் மாநாட்டின் நோக்கம் பற்றி விளக்கினார்.

சிட்கான் 2026 தொழில் வர்த்தக கண்காட்சியில் இடம் பெற்ற சிறந்த மூன்று ஸ்டால்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன. அதன்படி, பாலவிக்னா வீவிங் மில்ஸ் பி.லிட்., பவர் ஹவுஸ் வெஜிடபில்ஸ், அதிர்ஷ்டு லைஃப் சைன்ஸ் ஆகிய ஸ்டால்களுக்கு வழங்கப்பட்டன.

ஒவ்வொரு சிட்கான் மாநாட்டிலும் சிறந்த தொழில் முனைவோருக்கான ஸ்டார் விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த முறை, ஜெயஸ்ரீ ஸ்பன் பாண்ட் நிறுவனத்தார் திரு. T.T. சேதுராம் அவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதை, சென்ற 2024ம் ஆண்டு ஸ்டார் விருது பெற்ற ப்ளாக் ஃபாரஸ்ட் திரு. B. ஆனந்த் அவர்கள் வழங்கினார்.

அதேபோல, சேம்பர்-ல் இணைந்து, பல பொறுப்புகள் வகித்து பல்வேறு தொழில் சேவைகளை செய்தவர்களுக்காக, உத்யோக் சேவா ரத்னா விருது வழங்கப்படுகிறது. இந்த முறை, பாண்டியன் பிரிண்ட் பேக் & டெக்ஸ்டைல் மில்ஸ் நிறுவனத்தாரும், சேம்பர் முன்னாள் தலைவருமான திரு. M.K. கலாதர் பாபு அவர்களுக்கு சேம்பர் வழங்கி கௌரவித்தது. இதை, சென்ற 2024ம் ஆண்டு உத்யோக் சேவா ரத்னா விருது பெற்ற திரு. S.K.R. ரமேஷ் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, மாநாட்டு மலர் வெளியீடு செய்யப்பட்டது. இதனை, மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. M.M. கோபிசன் அவர்கள் வெளியிட்டார். முதல் பிரதியை, இட்காட் முன்னாள் இயக்குநர் திரு.S.R. நாகேஸ்வரன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

K.L.N. பொறியியற் கல்லூரி கௌன்சில் செயலாளர் திரு. K.N.K. கணேஷ் அவர்கள் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார். அவர், நம் சமூக மாணவர்களின் கல்வி மற்றும் இன்றைய தொழில் வாய்ப்புகள் குறித்துப் பேசினார்.

இந்த மாநாடு சிறப்பாக நடைபெற உதவிய நன்கொடையாளர்களுக்கு விழா மேடையில் பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

டாட்காம் இன்ஃபோ வே நிறுவனத்தின் தலைவர் திரு. வெங்கடேஷ் ராஜேந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். அவர், இன்றைய ஏஜ பயன்பாடுகள் பற்றி அழகாக விளக்கினார். இதன்மூலம் ஏற்படப் போகும் தொழில் வாய்ப்புகள் குறித்துப் பேசினார். நிகழ்வில் கலந்து கொண்ட அங்கத்தினர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

நிறைவாக, ஸௌராஷ்ட்ர மத்ய சபைத் தலைவர் திரு. T.R. சுரேந்திரன் பாபு அவர்கள் வாழ்த்துரை வழங்க, சிட்கான் மாநாடு துவக்கத்தின் முதல் நாள் வெகு சிறப்பாக நடைபெற்று முடிந்து. இரண்டாம் நாள் நிகழ்வுகளில் அங்கத்தினர்கள் அனைவரும் கலந்துகொள்ள பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து, சிட்கான் விழா மேடை, சௌபாக்யாஸ் டயமண்ட் ஜுவல்லரி நிறுவனத்தாரிடம் அளிக்கப்பட்டது. இந்த நிகழ்வை, உரிமையாளர் திரு. T.L. சபரி பாபு அவர்கள் ஏற்று நடத்திச் சென்றார். இதில், வைர நகை தரப் பரிசோதனை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தவிர, குலுக்கல் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை இரவு உணவு ஏற்பாடு செய்யப்பட்டது.



Kolattam

அவோ! மிளோ!! ஹொடோ!!!
SITCON
SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE
August 7, 8, 9 & 15, 16, 2026



Bharatanatiyam

SOURASHTRA CHAMBER OF COMMERCE
MADURAI



Honor to Donors



SITCON - **STAR AWARD**



SITCON - **UDYOG SEWA RATNA AWARD**



SITCON - **SOUVENIR Releasing**



Speech by Souvenir Coordinator



Best Stall Awards



Master of Ceremony




Speech by Chief Guest

Honoring to Honorable M.L.A., (Mdu. South). **M.M. GOPISON**




Speech by Guest of Honor



Honoring to Chief Guest



Members Gathering



Felicitation Speech




Program of **SOWBHAGYAAS**

Gold, Diamond, Silever

# சிட்கான் 2026 மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்





சிட்கான் 2026 மாநாட்டின் இரண்டாம் நிகழ்ச்சிகள் துவக்கத்தில், நிலையூர் ஆதினம் **ஸ்ரீலஸ்ரீ. சுப்ரமணிய தேசிக பரமாச்சாரியார்** அவர்கள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குகிறார். அவரைத் தொடர்ந்து, ஸ்ரீ பிரசன்ன வெங்கடேஸ்வர பள்ளி மாணவர்கள், கே.எல்.என். பொறியியற் கல்லூரி மாணவ மாணவியர்களின் திறன் வெளிப்பாடு நிகழ்ச்சி நடைபெற்றது.




மூன்று தலைமுறைகளை கடந்து தொழில் துறையில் சாதித்து வரும் நம் சமூகத்தவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு. ராசிபுரம் லக்ஷ்மிராம்ஸ் நிறுவனத்தார் திரு. **ஹரிஹரன்** அவர்களுக்கும் (இடது), கார்த்திக் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தார் **புட்டா திரு. கார்த்திக்** அவர்களுக்கும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் இந்த விருதை வழங்கி கௌரவித்ததில் பெருமை கொள்கிறது.



மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. **M.M. கோபிசன்** அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்து வாழ்த்தும் நிகழ்வு



தொழில்முனைவின் அடுத்தகட்ட நகர்வைப் பற்றி ஜே.சி.ஐ. அமைப்பின் தேசிய பயிற்சியாளரும் அக்ஷயா சில்க்ஸ் நிறுவனத்தாருமான **திரு. N.T. ஸ்ரீநிவாசன்** அவர்கள் பேசுகிறார்.



வணிக வளர்ச்சியில் மகளிர் பங்கு பற்றிய தலைப்பில் பற்றி வழக்கறிஞரும், எழுத்தாளருமான பிரபலர் திருமதி. **சுமதி** அவர்கள் கலந்து கொண்டு பேசுகிறார். இந்த நிகழ்வில், மகளிர் நடத்திச் சென்றது குறிப்பிடத்தக்கது. திருமதி. சந்திரகலா குமரேசன், திருமதி. வரலட்சுமி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. ஜெயந்தி சேகர், திருமதி. மாலதி ரமேஷ், திருமதி. பிரதிபா குமரேசன், திருமதி. பிரதா தேவி பாலா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.



வளர்ந்து வரும் இளம் தொழில் முனைவோர் ஜீவன் ரோட் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் திரு. ஜீவன் ரமேஷ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.







**என்.எம்.ஆர். சுப்பராமன் மகளிர் கலைக் கல்லூரி** மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள்





திருமதி. **சந்திரகலா குமரேசன்**, திருமதி. **கார்த்திகா லட்சுமி** அவர்கள் ஏற்பாட்டில் மகளிர்க்கான தசாவதார நிகழ்ச்சி நடைபெற்றது. (அலங்காரம்: மானசா பியூட்டி பார்லர்)



தம் தொழில் அனுபவங்களோடு, தாம் கண்ட ஏற்றத்திற்கு ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் பங்கு பற்றி பேசுகிறார் சத்யபாமா கேட்டரிங் **திரு. P.R. குபேந்திரன்.**



தொழில்நுட்பம் மற்றும் ஏஜ தாக்கம் குறித்துப் பேசுகிறார் ஆதித்யா கல்விக் குழுமத்தின் முதன்மை நிர்வாக அலுவலர் **டாக்டர். K.N. கணேஷ்**



ஸௌராஷ்ட்ர சமூகத்தின் இளைய தலைமுறை தொழில்முனைவோர்களுக்காக உருவான ஸௌராஷ்ட்ர **நெக்ஸ்ட்ஜென்** அமைப்பு நிர்வாகிகளை ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அங்கீகரிக்கும் நிகழ்வு. சிட்கான் 2026 மாநாட்டுடன் நடத்தப்பட்ட மதுரை ரன் மாரத்தான் போட்டி முழு ஏற்பாடும் நெக்ஸ்ட்ஜென் அமைப்பினர் செய்ததை கருதி விழா மேடையில் கௌரவிக்கப்பட்டனர். ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் மூலமாக இந்த அமைப்பு உருவானது குறிப்பிடத்தக்கது.



திருப்பூர் ஸௌராஷ்ட்ர சபை, திருப்பதி ஸௌராஷ்ட்ர சபை அமைப்பு நிர்வாகிகள், சுங்குடி சேலை அமைப்பின் தலைவர் திரு. A.K. ரமேஷ், தினமணி நாளிதழ் மூத்த பத்திரக்கையாளர் திரு. V.N. சாமி போன்றோர் இரண்டாம் நாள் நிகழ்வில் பங்கேற்றனர்.



சிட்கான் 2026 மாநாட்டிற்கு பணியாற்றிய நிர்வாகிகள் மற்றும் குழு உறுப்பினர்கள் அனைவரும் விழா மேடையில் அங்கீகரிக்கப்பட்டு குழுவாக இணைந்து புகைப்படம் எடுத்துக்கொண்ட காட்சி



ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் முன்னாள் தலைவர்களின் வாழ்த்துரை வழங்கும் நிகழ்வு.
இதனையடுத்து, பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில, விழா இனிதே நிறைவு பெற்றது.




சிட்கான் 2026 மாநாடு நிறைவுக்குப் பிறகு விழா மேடை, பிவிகே குழுமம் ஏற்று நடத்தியது. இந்த நிகழ்வில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஸௌராஷ்ட்ர சமூக சாதனையாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வை பிவிகே குழுமத்தின் தலைவர் திரு. பாலா வெங்கட் குட்டி அவர்கள் நடத்திச் சென்றார். டிவி புகழ் தமிழ் இளவல் திரு.ராமகிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.



சிறந்த சமூக அமைப்புக்கான விருதை பி.வி.கே. குழுமம், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-க்கு வழங்கி கௌரவித்தது

## Thanks our **Prestigious Donors** to make the event more Succussful


M/s. Sowbhagyaas
M/s. BVK Groups
M/s. Dyadni Industries
M/s. Pandian Surfactants Pvt. Ltd.
Mrs. M.R. Krishnamoorthy - Varalakshmi
M/s. Energy Livingscapes Pvt. Ltd.
M/s. EAV Rengachary& Sons
M/s. Sri Daithyasudhan Textiles
M/s. Vignesh Graphics
M/s. Vale Hospital
M/s. Shree Sivabalaaji Steels Pvt. Ltd.
M/s. Balawigna Weaving Mills P.Ltd.
M/s. Cromson Importers
M/s. Quality Knit Wears Pvt. Ltd.
Mr. B.V. Ramesh Babu - Karpaga Motors
M/s. Geo Digital Press
M/s. Blaack Forest
Sri. C.L. Sridhar - Sri Meenakshi Constructions
M/s. K.L.N. College of Engg.
M/s. K.L. Viswanathan and Co.
M/s. Rengachary Cloth Store
M/s. Sunrise Chemicals
M/s. Sitabai Parvatha Varthini Ammal Trust
M/s. Orient Builders & Decors
M/s. TKD Enterprises
Smt. L.S. Sandhya Sankar
Dr. B.R.J. Sathish Kumar
M/s. SRE Corporation
M/s. Salfa Industries
Smt. S.S. Nalini Rathanlal
M/s. Venkat Screen
Sri. K.K. Gnanaprabhakaran
M/s. R.K. Bapulal & Associates
M/s. Sevenseas Entitlement - Rajsekar
M/s. Pandian Print Packs and Textile Mills P.Ltd.
M/s. KRVP Overseas P.Ltd.
M/s. Amar Tek

M/s. TRB Diamonds
M/s. Jayshree Spun Bond - T.T. Sethuram
M/s. Fibretuff India P.Ltd.
M/s. Dot-com Infoway
M/s. EASA College of Engineering
M/s. Shriram Shekar
M/s. Mahindran Car Parking
Sri. TRL Hari - TH Abinaya
Sri. Laguduva Bhaskar
Sri. S.R. Nageswaran
Sri. Loganathan Traders - T. Loganathan
Sri. Indowind K.S. Ravindranath
Sri. P.R. Kubendran - Sathyabama Catering
Sri. V.V. Ramlakshmanji
M/s. Sarathi Javuli Kadai
M/s. Ramesh Cottage Industries
M/s. Meerakunj Polymers
Sri. J.A. Sankar
Sri. PSR Janardanan Maithrayi
M/s. Prarthana Ayurveda Health Centre
Sri. N.R.R. Gopi
M/s. Don Publication
Sri. T.G. Satheesh Kumar
M/s. Aiswarya Textiles
M/s. Rani Sarees - Balaji
M/s. Texaco Engineering
Sri. B.S. Anandan, ARP Offset
Sri. J.R. Prakash
Sri. K.S. Chandrasekaran
Sri. K.R. Sridharan
Sri. V.R. Sekar
Sri. T.S. Ravisan
Sri. Vijayakumar, Porur
Sri. CA. Arangesh
Sri. Vijay Ganesh

SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI
திட்டமிடுவோம்
செயல்படுவோம்
சிகரம் தொடுவோம்

அவோ ! மிளோ !! ஹொடோ !!!
SITCON
SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE
August 7, 8, 9 & 15, 16, 2026

# நம்மோடு வாழ்ந்த மாபெரும் தொழிலதிபரின் மறைவுக்கு சேம்பர்–ன் இரங்கல்



**கே.கே. சுரேந்திரநாத்**

மறைவு: 17.07.2026

கெமிக்கல் துறையில் இந்தியா முழுவதும் மிகவும் பிரபலமான வாருணி கெமிக்கல்ஸ் **கே.கே. சுரேந்திரநாத்** ஜி அவர்களின் மறைவுச் செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒரு புகழ்பெற்ற தொழிலதிபராக, அவர் பல வணிக நிறுவனங்களை வெற்றிகரமாக உருவாக்கி விரிவுபடுத்தினார். தன் சகோதரர்கள் குறிப்பிடத்தக்க வெற்றியை அடைய வழிகாட்டுவதிலும் அவர்களை உயர்த்துவதிலும் அவர் முக்கியப் பங்காற்றியவர்.

வணிகத்திற்கு அப்பாற்பட்டு, எண்ணற்ற சமூக மற்றும் சமுதாய அமைப்புகளுக்கு அவர் ஒரு வலுவான ஆதரவுத் தூணாகத் திகழ்ந்தார். அதில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ம் ஒன்று. 2007ல் நம் சேம்பர் துவங்கி செயல்படுவதற்கு முதன் முதலில் ரூ. 50000/– வழங்கி போஷக அங்கத்தினராக இணைந்தவர். இன்று வரையில் ஆலோசகராக செயல்பட்டு வந்தவர்.

அவரது மறைவு, அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பு மட்டுமல்ல, நமது ஸௌராஷ்ட்ர சேம்பருக்கும் ஒரு பெரும் இழப்பாகும்.

அவரது தொலைநோக்குப் பார்வை, தலைமைத்துவம், தாராள குணம் மற்றும் சமூகத்திற்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவை என்றும் ஆழ்ந்த மரியாதையுடன் நினைவு கூரப்படும்.

அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது ஆன்மா நித்திய சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம். ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக, துயரத்தில் வாடும் அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஈடுசெய்ய முடியாத இழப்பைத் தாங்கிக்கொள்ள எல்லாம் வல்ல இறைவன் அவரது குடும்பத்தினருக்கு வலிமையைத் தருவாராக.

## இரங்கல்



**V.T. சதாசிவன்**


மறைவு: 21.07.2026

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் ஆண்டு சந்தா உறுப்பினர் திரு. **V.T. சதாசிவன்** அவர்கள் காலமானார் என்பதை மிகுந்த வருத்தததத்துடன் தெரிவித்துககொள்கிறோம். ஆண்டு சந்தாவை சமூகத்திற்கு செய்யும் கடமையாக கருதி தவறாமல் தொடர்ந்து செலுத்தி வந்தவர்.

உயர்ந்த உள்ளம் கொண்ட மனிதர் இன்று நம்முடன் இல்லாதது மிகுந்த வருத்தம் அளிக்கிறது. அன்னாரது குடும்ப உறுப்பினருக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறது.

அவரது ஆன்மா எல்லாம் வல்ல வைகுண்டநாதனில் கமலப்பாதத்தில் சாந்தி பெற இறைவனை வேண்டுகிறோம்.

## இரங்கல்



**T.A. ஸ்ரீநிவாசன்**

மறைவு: 21.07.2026

நமது சேம்பர்–ன் ஆயுட்கால உறுப்பினர். ஸ்ரீநிவாஸ் அட்வர்டைசிங் திரு. T.A. **ஸ்ரீநிவாசன்** அவர்கள் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நம் சமூக செய்திகள், விளம்பரங்கள் பல நாளிதழ்களில் வர ஏற்பாடு செய்பவர். இன்று நம்மோடு இல்லாதது வருத்தமளிக்கிறது.

அன்னாரத ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம். அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.




Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**


நம்பிக்கைக்கும், வலிமைக்கும்
JSW COLOURON+ கூரைகள்
JSW Steel
JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக
தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்
ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.
18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.
போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63
கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.
Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in
நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்
Meerakunj
RIGID PVC PIPES, FITTINGS & TANKS
AN ISO 9001 : 2008 COMPANY
Trust us with all your Electrical Plumbing and Agri needs...
Architect's First Choice
Architects Suggest ...
The right way to sensible plumbing
Specialy Made for Borewells
Specialy Made for Watersupply
வாட்டர் டேங்கிற்கு 10வருட வாரண்டி
மீரா குஞ்ச் பாலிடிரேடர்
17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.
போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372
E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com
VIJAYASHANKAR SCREEN SUPPLIERS
Non Woven Fabrics & Bags
Surgical Spunbond & Lace
SMMS
100% Viscos
Hydrophilic
JUTE FABRICS & BAGS
COTTON FABRICS & BAGS
Sanitary Napkin Raw Materials
Screen Printing Materials /
Plastisol Ink (Sports Printing) Water Base Ink, Sublimation Ink & Paper
Surgical Gown, Mask & More
N95 Masks
PPE Kit Surgical
J.A. SANKAR
94431 34465
For Order & Info
93441 04451, 91500 32885 / 86
H.O.: 44/1, New No.105, South Masi Street, Madurai - 1. Email: vijayasankar@gmail.com
B.O.: 94, 102 & 103A, South Marret Street, Madurai - 625001
விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!
ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்
விஜயலெட்சுமி DTP & ஸ்கிரீன்
91506-00904, 99940-18805, 78128-19162
கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு,
மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.
SINCE-1993 31 Years 2023 SvlS
வெள்ளி விழா கண்ட நிறுவனம்
அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்
தினசரி & கட்டிங் மாத காலண்டர்
12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர்
தமிழ் டைரி ஆங்கில டைரி
30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்
20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை
பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY
விபூதி கவர் 7 DAYS DELIVERY
சாமி படம் வுட்லேமினேசன்
ஸ்கூல் லேபிள்
ஸ்ரீ தைத்யசூதன் மஹாவிஷ்ணு
1-1-2024
நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!
Cell : 98421-18873, 98428-18873
R.R. பாலகுமார்
R.R. குபேந்திரன்
R.R. பிரேம்குமார்
e.mail : svlsmadurai@gmail.com

Printed Matter / Book Post

Date of Posting : 27.08.2026 / BPC MDU
Date of Publication 20th of Every Month

**Kuttuva Silicates (P) Ltd.,**

KSPL,Madurai

5A, (New No.17) New Teppakulam Colony, Near Annai Chandramathi Mahal, Madurai-625 009.
Email: sales@kuttuvasilicates.com, https://www.kuttuvasilicates.com
Phone: Office: +91 452 2312293 / 98409 60846



Manufacturers of
Sodium Silicate Liquid
Sodium Meta Silicate Powder
Geo Polymer Concrete Liquid

VSOC Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy, Joint Replacement


**வேல் மருத்துவமனை**

**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL — RIGHT TREATMENT IS EVERYONE'S RIGHT

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




சிறப்பம்சங்கள்
- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்
- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

नवीन एवं नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF NEW AND RENEWABLE ENERGY
सत्यमेव जयते

தென் தமிழகத்தின்
**நம்பர் 1**
சோலார் நிறுவனம்

Premium Quality
30+ Years Warranty
100 % Guarantee



Prakash Green Energy
Providing Perfect Solar Solutions

வீடுகளுக்கு 78000 ரூ அரசு மானியமாக பெற்றுத் தரப்படும்

MSME
TANGEDCO

**அதிக மின் கட்டணம் செலுத்துகிறீர்களா ?**

உங்கள் வீடு, வணிக கட்டிடம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அதிக மின் கட்டணம் செலுத்துவதை தவிர்த்திடுவீர்

வங்கி கடன் வசதியும் உண்டு. வட்டி விகிதம் 6.5% முதல்
+91 63749 01500
support@prakashgreenenergy.com
www.prakashgreenenergy.com
HEAD OFFICE:
14R, N.S Konar Street, Jaihindpuram,Madurai - 625011

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com